எழுப்புதல் ஜெப ஐக்கியத்தின்

# ஐக்கிய மலர்

Volume No: 26 Issue No: 8 Bro.P.D.ஞானப்பிரகாசம் May - 2024

ஆயுட்கால ஐக்கிய வாக்குத்தத்தம் :

*சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்,*
*கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்.*
*ஏசாயா 60:22*

**2024-ம் வருட ஐக்கிய வாக்குத்தத்தம் :**

**"உங்களைப்பார்க்கிலும்
ஜனம் பெருத்த பலத்த ஜாதிகளை
நீங்கள் துரத்துவீர்கள்."** உபாகமம் 11:23.

"கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தவர்கள்."
ஆதியாகமம் 18:22



தனிப்பிரதி ரூ. 5.00
ஆண்டுச் சந்தா ரூ. 60.00

# மே மாத வாக்குத்தத்தம் : 2024

**"என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்; நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன்."** எசே. 37:14

மே மாத எச்சரிப்பின் வசனம்: **"இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார்"** எசே.37:3

## உங்கள் சகோதரனிடமிருந்து...

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில், எழுப்புதல் ஜெபஐக்கிய ஊழியர்கள் மற்றும் தேவ பிரசன்னத்தை விரும்புகிற யாவருக்கும் வாழ்த்துகளை கூறிக் கொள்கிறேன்.

இப்புதிய மாதத்திலும், கர்த்தர் நம்மோடிருந்து தமது ஆவியை நம் மேல் அதிகமாய் ஊற்றி அற்புதமாய், அடையளமாக வழி நடத்துவாராக. ஒரு வேளை தேவன் நம்மை எச்சரிக்கும் வசனத்திற்கும் பதிலளிக்க ஆயத்தமாய் இருப்போம். நம் தேசத்தில் நடைபெற்று வருகிற தேர்தலுக்காக நாம் ஜெபித்தோம். ஏற்ற வேளையில் தேவன் தமக்கு சித்தமானவர்களை தெரிந்தெடுத்து நல்லாட்சி நடைபெற உதவிசெய்வாராக. ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஜெபிப்பது நம்முடைய கடமை. நம்முடைய குடும்ப இரட்சிப்பிற்காகவும், நல்ல ஆவிக்குரிய எதிர்காலத்திற்காகவும் தேவனை சார்ந்து ஜெபிப்போம். நாம் ஊழியம் செய்வது போல நம்முடைய பிள்ளைகளும், நம்முடைய அடிச்சுவடுகளை தொடர்ந்து வழிநடத்தப்பட மிகுதியான விசுவாசத்தோடு காத்திருப்போம். சோர்வான எண்ணங்களுக்கு ஒரு போதும் நாம் இடங்கொடுத்துவிடக்கூடாது. தேவன் கொடுத்த விசுவாசம் இன்னும் நம்மில் கிரியை செய்ய வேண்டும்.

அனைத்து சபைகளிலும் பல ஆவிக்குரிய உயிர்மீட்சி உண்டாகவும், பொறுப்பாய் ஊழியத்தை நடத்துவதற்கு தேவன் கிருபைகளை இன்னும் கொடுக்கும்படியாகவும், ஆங்காங்கே காணப்படுகின்ற பின்மாற்றத்தையெல்லாம் தேவன் மாற்றவும் யோவேல் 2:28ல் சொல்லப்பட்ட வாக்கின்படி மாம்சமான யாவர் மேலும் தேவன் தம்முடைய ஆவியை வைக்கவும் இன்னும் அதிகமாக ஜெபிப்போம். புதிய கல்வியாண்டு நம்முடைய பிள்ளைகள் யாவருக்கும் ஆசீர்வாதமாக இருக்கவும், பிள்ளைகளுக்கு கடினமான சூழ்நிலைகள் எல்லாம் கர்த்தரால் இலகுவாய் மாறவும், பொருளாதாரத் தேவைகள் யாவும் சந்திக்கப்படவும், கர்த்தர் உதவிசெய்வாராக. நம்முடைய ஜெப ஐக்கியத்திற்கு தேவன் கொடுத்த இம்மாத ஊழியங்கள் யாவும் தடையின்றி நடக்கவும், ஊழியர்களுக்கு தம்முடைய வரங்களையும், வல்லமைகளையும் தேவன் கொடுக்கவும், அதனால் ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படவும் ஆண்டவருடைய வழிநடத்துதலுக்கு காத்திருந்து ஜெபிப்போம். இப்பத்திரிக்கை மூலமாக நீங்கள் பெற்று வரும் ஆசீர்வாதங்களை பகிர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கு ஜெபிக்கக்கூடிய ஜெப விண்ணப்பங்களையும் தெரிவித்தால் அவைகளையும் தேவசமூகத்தில் வைத்து ஜெபிப்போம். மிக ஆச்சரியமான பதில்களை தேவன் தந்து நம்மையும், நம்முடைய நிர்வாகத்தையும் இன்னும் சிறப்பாக தேவன் நடத்துவார். நம் ஐக்கியத்தை குறித்தான தரிசனம் மாறாமல் சரியாய் நடக்க உங்கள் ஜெபங்கள் அதிகம் தேவை. கடந்த மாதங்களை காட்டிலும் இம்மாதங்களில் இனி வரும் மாதங்களிலும், ஐக்கிய காரியமாக அதிகமாக ஜெபிக்க வேண்டும். தடைகள் எல்லாம் நீங்கிப் போகவும், சாத்தானுடைய கிரியைகள் எல்லாம் அழிந்து போகவும் அதிக நேரம் கர்த்தருக்கு முன்பாக நில்லுங்கள். நம் ஐக்கியத்தின் மூலம் சந்திக்கப்பட்டவர்கள் தேசத்தில் பல இடங்களில் உண்டு. இவர்கள் நிலைத்திருக்கவும், ஏராளமான புதிய ஆத்துமாக்கள் ஆண்டவரண்டை வரவும், உங்கள் ஜெபங்களில் நினைத்துக்கொள்ளுங்கள். இம்மாதத்தில் நாம் அநேக அற்புதங்களையும், அதிசயங்களையும் காண வேண்டும். கர்த்தர் நமக்கு உதவி செய்வார். நம்பிக்கையோடும், ஜெபத்தோடும், ஸ்தோத்திரத்தோடும் இந்நாட்களை கடந்து வருவோம். கர்த்தர் நம்மோடு கூட இருக்கின்றார். ஆமென்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் இரவு 9.00 மணிக்கு google meet ல் இந்த link ல் https://meet.google.com/non-taah-nua ஜெபம் நடைபெறுகிறது.


கிறிஸ்துவின் பணியில்,

**P.துரைசிங் ஞானப்பிரகாசம்,**

ஆசிரியர், Cell: 90255 53614


வங்கி மூலம் காணிக்கை அனுப்புவோர், கீழ்க்கண்ட கணக்கு எண்ணில் அனுப்பி அதின் விபரத்தை ஐக்கியத்திற்கு தெரியப்படுத்துங்கள்.

STATE BANK A/c.No
Branch : Surandai
IFSC - SBIN0011065

Bro. **P.Duraisingh Gnanapragasam**

3 0 4 0 6 4 3 8 9 6 2

**Revival Prayer Fellowship Trust**

3 2 4 1 2 6 2 4 5 7 2

G pay
+919942950132


தொடர்புக்கு: சகோ. P.D.ஞானப்பிரகாசம் Cell: 90255 53614 | சகோதரி. S.சந்திரா ஞானப்பிரகாசம் Cell: 99653 36459 | சகோ. D.ஜோயல் Cell: 99429 50132

தேவ செய்தி

# “கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தவர்கள்”

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதம் தேவ செய்தியாக, கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்த ஆபிரகாம், எலியா, யூதா ஜனங்கள், எலிசா ஆகியோரைப் பற்றியும் அவர்களுக்கு தேவன் கொடுத்த ஜெயத்தைக் குறித்தும் தியானிப்போம். நாமும் கர்த்தருக்கு முன்பாக நிற்கிறவர்களாக இன்னும் மாறுதல் அடைந்து வாழ்க்கையிலே இழந்து போன அனைத்து வெற்றியையும் திருப்பிக் கொள்ளுவோம்.

## I கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்த ஆபிரகாம்: ஆதி.18:22

ஆபிரகாமோடு வளர்ந்து வந்த சகோதரன் மகனாகிய லோத்து ஆபிரகாமை விட்டுப் பிரிந்து போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அந்தச் சூழ்நிலையை ஆபிரகாமால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. லோத்து குடியிருந்த சோதோம் கொமோரா பட்டணத்தை அழிப்பதற்காக தூதர்கள் சென்ற போது அந்தப் பட்டணத்தை அழிவிலிருந்து காக்கவும், குறிப்பாக லோத்தும் அவருடைய குடும்பமும் பாதுகாக்கப்படவும், கர்த்தருக்கு முன்பாக ஆபிரகாம் நின்று ஜெபித்துக் கொண்டிருந்தான். அந்த ஜெபத்தை ஆண்டவர் கேட்டு லோத்துவைக் காப்பாற்றினார். அன்றைக்கு அந்த ஜெபத்தை செய்யாவிட்டால் லோத்துவிற்கு வேறு விதமான சூழ்நிலை உண்டாயிருக்கும்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, ஆண்டவர் நமக்குக் கொடுத்திருக்கிற பணி என்னவென்றால் அழிவை தடுத்து நிறுத்தும் ஜெபப் பணியே ஆகும். என் ஜெபத்தை தேவன் கேட்பாரா என்று நாம் சந்தேகப்பட வேண்டாம். நிச்சயமாக நமக்கு விசுவாசம் இருக்குமானால் நம்மால் ஜெபிக்காமல் இருக்க முடியாது. தேவனும் நமக்கு பதில் கொடுக்காமல் இருக்கவும் முடியாது. இன்றைக்கு உலக சூழ்நிலைகளை நாம் நன்றாய்ப் பார்க்கும் போது கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்த ஆபிரகாமைப் போல நாம் அனைவருமே மாற வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம். ஜனங்கள் மத்தியிலே சுவிசேஷங்கள் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும், ஆவியானவர் கிரியை செய்வதற்கு ஜெபிக்கிறவர்கள் தேவை. நீங்கள் எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் ஆத்துமாக்களுக்காக ஜெபிக்கும் பாரமுள்ள ஊழியத்தை விட்டுவிடாமல் நடைமுறைபடுத்திக்கொண்டே இருக்க வேண்டும். நிச்சயம் ஒரு நாள் வரும் அன்று நம் ஜெபங்களுக்கு தேவன் விசேஷித்த பதில் கொடுத்து நம்மை வழி நடத்த போவதை நாம் காணயிருக்கின்றோம். ஒரு வேளை நம்முடைய உள்ளத்திலே சோர்வுகள் இருக்குமானால் அவைகளை நம்மை விட்டு விலக்குவோம்.

## II கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்த எலியா: Iஇராஜா.17:1

கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா ஆகாபை நோக்கி: என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் (Iஇராஜா.17:1). இஸ்ரவேலின் தேசத்தில் மழை இல்லாத பஞ்சம் ஏற்பட்ட போது கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்த எலியாவோடு தேவன் பேசினார். தேசத்தில் பனியும், மழையும் பெய்யாதிருக்கும் என்று தன்னோடு கர்த்தர் பேசினதாக எலியா கூறினார். யார் யார் கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டு இருக்கிறார்களோ அவர்களோடு கர்த்தர் நடக்கும் காரியங்களைக் குறித்து திட்டமும், தெளிவுமாகப் பேசுவார். எலியாவோடு கர்த்தர் பேசின வார்த்தைகள் அப்படியே நிறைவேறிற்று. அன்று எலியா செய்த ஊழியத்தை அதே இடத்தில் நின்று நாமும் செய்ய அழைக்கப்பட்டிருக்கின்றோம். தேசத்தின் க்ஷேமத்திற்காக ஜெபிப்பது மாத்திரம் அல்ல கர்த்தர் கூறும் வார்த்தைகளை தீர்க்கதரிசனமாக தைரியமாக சொல்ல ஊழியர்கள் தேவை. ஆண்டவர் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் தயவாய் அழைக்கிறார். சாக்குப் போக்கு சொல்லாமல், தாமதம் செய்யாமல், சில பிரச்சனைகள் முடிந்தவுடன் வருவேன் என்று காலம் கடத்தாமல் கர்த்தருக்கு முன்பாக நிற்க நம்மை முழுமையாக அர்ப்பணிப்போம்.

சில ஆண்டுகளுக்கு முன்பாக கர்த்தருடைய அழைப்பு எனக்கு வந்த போது, நான் கர்த்தருக்கு முன்பாக நிற்க வேண்டும் என்று அறிந்து கொண்டேன். ஆவியானவர் என்னோடு பேசிக்கொண்டிருந்தார். அந்த வார்த்தைகளை வைத்து தினமும் காலையும், மாலையும் ஜெபம் செய்யும் போது நான் போக வேண்டிய சரியான வழியைத் தேவன் காட்டினார். அந்த வழியாகச் செல்லும் போது ஆசிரியர் பணியையும், சபை ஊழியர் பணியையும், ஜெப ஐக்கிய ஊழியத்தையும் செய்யக்கூடிய வழிமுறைகளை தேவன் எனக்கு காண்பித்தார். அப்பொழுது நான் புரிந்து கொண்டது என்னவென்றால் கர்த்தருக்கு முன்பாக நிற்பது மகத்துவமான பணி என்பதேயாகும். இன்றும் ஆவியானவர் அதே பணியை தந்து நடத்திக் கொண்டிருக்கிறார். வேத வசனத்தின் மூலமாக ஊழியங்களை செய்ய இன்னும் பெலன் தருவார் என்றும் விசுவாசிக்கிறேன். சில சமயங்களில் சில வெளிப்பாடுகள் மூலமாகவும் தேவன் தமது ஊழியத் திட்டங்களை விளங்கப் பண்ணிக் கொண்டிருக்கின்றார். அதற்கு வசனங்கள் ஆதாரமாக இருக்கின்றது. எனவே இதுவரை செய்த ஊழியத்தைவிட, இனி செய்யப் போகிற ஊழியம் சிறப்பாக இருக்கும் என்பதை நான் விசுவாசிக்கிறேன்.

## III கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்த யூதா ஜனங்கள்:
IIநாளா.20:13

யூதா கோத்திரத்தார் அனைவரும், அவர்கள் பெண்ஜாதிகளும், அவர்கள் குமாரருங்கூட கர்த்தருக்கு முன்பாக நின்றார்கள் ( IIநாளா.20:13). யோசபாத் ராஜாவுக்கு எதிராக பல நாட்டு ராஜாக்கள் யுத்தத்திற்கு வந்தபோது யூதா தேசத்தில் உள்ள ஜனங்களும் குறிப்பாக குழந்தைகளும், அவர்கள் பெண்ஜாதிகளும், அவர்கள் குமாரர்களும்கூட கர்த்தருக்கு முன்பாக நின்றார்கள் என்று வேதத்தில் வாசிக்கின்றோம். இன்னொரு புறத்தில் யோசபாத் ராஜா கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தாலும் கர்த்தர் எல்லாருக்கும் இரக்கம் செய்து குறிப்பாக ஜனங்களுடைய ஜெபத்தை ஆண்டவர் கேட்டார். அற்புதமான பதில் அளித்தார். இவர்களை எதிர்த்து யுத்தத்திற்கு வந்தவர்கள் அனைவரும் யுத்தத்தில் தோல்வியை சந்தித்தார்கள். ஜெபத்தை தேவன் கேட்டதற்கு அடையாளமாக யகாசியேல் என்ற தேவ மனிதனோடு தேவன் பேசினார். இந்த யுத்தம் உங்களுடைய அல்ல, தேவனுடையது என்று பேசின வார்த்தையை தேவன் நிறைவேற்றினார். கர்த்தருக்கு முன்பாக நிற்கிற அனுபவம் கர்த்தரின் வார்த்தையை நமக்கு கற்றுக்கொடுக்கும் அனுபவமாகும்.

யூதா ஜனங்களுக்கும் ராஜாவுக்கும் மிகப்பெரிய ஜெயம் கிடைத்ததற்கு தேசமே கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்ததே ஆகும். இச்செய்தியை தியானிக்கிற நாம் அனைவரும் எந்த பிரச்சனைகள் மத்தியில் இருந்தாலும், ஊழியப் பளு ஒருபக்கம் இருந்தாலும், கர்த்தருக்கு முன்பாக நிற்பதை நாம் விட்டுவிடவும் கூடாது, குறைத்துக் கொள்ளவும் கூடாது. இவைகளில் இன்னும் வளர்ந்துக் கொண்டே இருப்பது நல்லது. இதுவரை இல்லாத வழி நடத்துதல் நமக்கு கிடைக்கும். குறிப்பாக அப்போஸ்தலர் காலங்களில் ஏற்பட்ட மாற்றங்கள், எழுப்புதல் போன்ற தேவனுடைய கிரியைகள் நம் மூலமாக தேவன் செய்வார். நாம் இந்த மேலானவைகளை நாடவேண்டும். ஜெபிக்கிறவர்களுக்காக வேதத்திலே எத்தனையோ விதமான சத்தியங்கள் எழுதப்பட்டுள்ளது. அவைகளை மீண்டும், மீண்டும் தியானித்து நடைமுறைப்படுத்தும் போது நம்முடைய விசுவாசம் இன்னும் வளரக்கூடிய அளவிற்கு ஆவியானவருடைய கிரியைகள் பலமாய் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். இதை அநேகர் அறிந்து இன்னும் ஆண்டவரண்டை யாவரும் கிட்டிச் சேர தேவன் கிருபை கொடுப்பார். ஆகவே ஜெபத்திற்கு உரிய பதிலை இன்னும் அதிகமாக எதிர்பார்ப்போம். நாம் வேண்டுவதற்கும், நினைப்பதற்கும் மிகவும் அதிகமான ஜெப பதிலை தேவன் தருவார். சில நேரங்களில் ஜெபிக்க விடாதபடி சாத்தானின் ஆவிகள் நமக்கு விரோதமாக போராடும். அவைகளை கண்டு கலங்கி விடாதபடி நம் ஜெப நேரங்களை இன்னும் கூட்டி கர்த்தருக்கு முன்பாக நிற்க பழகிக்கொள்வோம். கர்த்தர் நம்மை ஆசீர்வாதமாக நடத்துவார்.

## IV கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்த எலிசா:
IIஇராஜா.3:14

அதற்கு எலிசா: நான் யூதாவின் ராஜாவாகிய யோசபாத்தின் முகத்தைப் பாராதிருந்தால் நான் உம்மை நோக்கவுமாட்டேன், உம்மைப் பார்க்கவுமாட்டேன் என்று சேனைகளுடைய கர்த்தருக்கு முன்நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் (II இராஜா. 3:14) என்று தன்னை தேடி வந்த ராஜாக்களை பார்த்து எலிசா இவ்விதமாக சொல்கிறார். இப்படி சொல்லக்கூடிய அளவிற்கு எலிசா கர்த்தருடைய வார்த்தையால் நிறைந்து காணப்பட்டார். இந்த அனுபவம் எலிசாவிடம் இருந்தபடியால் அவருடைய ஊழியக்காலம் முழுவதும் ஜெயமாக காணப்பட்டது. தனக்குள் இருந்த ஆவியின் இருமடங்கு வரங்களையும் வைத்து தேவன் அவரை நன்றாக பயன்படுத்தினார். எலிசா இருந்த காலம் முழுவதும் ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தார். குறிப்பாக நாகமான் என்ற குஷ்டரோகி இவர் மூலமாக கர்த்தருடைய வார்த்தையை பெற்றுக்கொண்டு அற்புத சுகம் பெற்றதை வேதத்தில் வாசிக்கின்றோம். எலிசாவுடைய இறுதிகாலம் வரும்போது இஸ்ரவேலுக்கு இரதமாகவும், குதிரை வீரராகவும் இருந்தவரே என்று ராஜாக்கள் கூறக்கூடிய அளவிற்கு கர்த்தர் எலிசாவை நடத்தினார்.

இச்செய்தியில் நாம் தியானித்த ஆபிரகாம், எலியா, யூதா ஜனங்கள், எலிசா போன்றோர் கர்த்தரால் பயன்படுத்தப்பட்டார்கள். அவர்களிடம் காணப்பட்ட நற்கிரியை என்னவென்றால் கர்த்தருக்கு முன்பாக நின்ற உயர்ந்த அனுபவமேயாகும். அவர்களுக்கும் போராட்டங்கள் வந்தது. ஆனாலும் அனைத்திலும் ஜெயம் பெற்று தன்னுடைய உன்னத அனுபவத்தை விட்டு விலகாமல் கர்த்தருக்கென்று வைராக்கியமாக வாழ்ந்தார்கள். ஆகவே கர்த்தர் அவர்களை வைராக்கியமாய் வழிநடத்தினார். இந்த நாட்கள் தேவன் நமக்கு கிருபையாய் கொடுத்த காலமாகும். நாம் ஊழியம் செய்து கொண்டிருப்பவர்களானால் இன்னும் அதிகமாக செய்ய பிரயாசப்படுவோம். ஒரு வேளை ஊழியத்தை முன்னால் செய்து விட்டு இப்போது செய்யாமல் இருப்போமானால் அதை தவறு என்று உணர்ந்து அறிக்கையிட்டு மீண்டும் இழந்து போன ஊழியத்தை திரும்ப செய்வோம். ஒருவேளை இதுவரை ஊழியமே செய்யாமலே இருப்போமானால் ஆண்டவர் விரும்புகிறபடி செய்ய ஒப்புக்கொடுப்போம். அறுவடை மிகுதி, ஆட்களோ கொஞ்சம். இந்த நல்ல பணிக்கு நம்மை ஒப்புக்கொடுத்து பரிசுத்த ஆவியின் அபிஷேகம் நம்மை நிரப்பும்படி விசுவாசிப்போம். கர்த்தர் உங்கள் மேல் கிருபையாய் இரங்கி குடும்பமாகவும் ஊழியம் செய்ய அவரால் முடியும். இந்த செய்தியை அற்பமாய் எண்ணி விடாதபடி கர்த்தருக்கு முன்பாக நிற்கவும், தேவதிட்டத்தை பெற்றுக்கொள்ளவும் கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வாராக. ஆமென்.

சகோ. P.D.ஞானப்பிரகாசம், சுரண்டை.

ஜெப எண் - 270 | ஜெப நாள்: 07-05-2024 செவ்வாய் | காலை 6.00 To மாலை 6.00 வரை.

## 12 மணி நேர உபவாச சங்கிலித் தொடர் ஜெபமும், மாதம் முழுவதும் ஜெபிக்க வேண்டிய ஜெப விண்ணப்பங்களும்

### 1. மே மாதத்தின் ஆசீர்வாதங்களுக்காக :

1. எசேக்கியேல் 37:14 என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன். நீங்கள் உயிரடைவீர்கள். இம்மாதம் முழுவதும் தேவன் தம்முடைய ஆவியை நமக்குள் வைத்து, உயிர்மீட்சியான அனுபவங்களை நமக்குச் செய்யவும், இதனால் தேவ நாமம் நம் மூலம் மகிமைப்படவும் ஜெபிப்போம்.

2. மத்தேயு 7:29 ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். இம்மாதம் முழுவதும் நாம் செய்யும் ஊழியங்களில் அதிசயங்கள் நடைபெறவும், இயேசுவைப் போல ஊழியம் செய்யும் கிருபைகள் இன்னும் நம்மேல் வந்து இறங்கவும், ஜனங்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

3. யோசுவா 10:42 இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணினார். இம்மாதம் முழுவதும் இஸ்ரவேலராகிய நமக்காக கர்த்தர் யுத்தம் செய்யவும், பிசாசின் கிரியைகள் யாவும் அழிக்கப்படவும், ஜெபத்தின் ஆவி நம்மை இன்னும் அதிகம் பற்றி பிடிக்கவும் ஜெபிப்போம்.

4. I கொரிந்தியர் 14:39 சகோதரரே, தீர்க்கதரிசனம் சொல்ல நாடுங்கள். அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடை பண்ணாதிருங்கள். இந்த ஆவிக்குரிய அனுபவங்கள் நம் குடும்பங்களில் இன்னும் அதிகம் பெருகவும், இதனால் ஆவிக்குரிய எழுப்புதல் இம்மாதத்தில் வளரவும் ஜெபிப்போம்.

5. ஏசாயா 31:6 இஸ்ரவேல் புத்திரரே, நீங்கள் முற்றிலும் விட்டுவிலகினவரிடத்தில் திரும்புங்கள். தேவனை விட்டு விலகிப் போனவர்கள் யாவரும் மீண்டும் தேவனிடம் வரவும், கர்த்தர் அவர்களை முன்பைவிட வல்லமையாய் பயன்படுத்தவும், இம்மாதம் அநேகர் தங்கள் பின் மாற்றத்தைவிட்டு மனந்திரும்ப ஜெபிப்போம்.

6. யோபு 42:10 யோபு தன் சினேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். இம்மாதம் நம் ஜெபங்களைக் கேட்டு நம்முடைய நீண்ட நாள் சிறையிருப்பை கர்த்தர் மாற்றும்படி ஜெபிப்போம்.

### 2. நம் தேசம் கர்த்தருக்குள் ஆசீர்வதிக்கப்பட

1. சங்கீதம் 19:7 கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. நம் தேசத்தலைவர்கள் வேதத்தின் மகத்துவங்களை அறிந்து கொள்ளவும், நேரம் ஒதுக்கி ஜெபிக்கவும், பிரச்சனைகள் யாவும் மாறவும், கர்த்தர் அவர்கள் குடும்பங்களை வழிநடத்தவும் ஜெபிப்போம்.

2. அப்போஸ்தலர் 8:29 ஆவியானவர், நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்து கொள் என்று பிலிப்புடனே சொன்னார். தேசத்தின் தலைவர்கள் செல்லும் வாகனங்களில் ஆவிக்குரிய ஊழியர்கள் பயணம் செய்யவும், அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படவும், விசுவாசித்து ஞானஸ்நானம் பெறவும் ஜெபிப்போம்.

3. நெகேமியா 9:7 கர்த்தர், ஆபிராமைத் தெரிந்து கொண்டு, அவனை ஊர் என்னும் கல்தேயரின் பட்டணத்திலிருந்து புறப்படப்பண்ணி... ஆபிரகாமை தெரிந்து கொண்ட ஆண்டவர், இம்மாதம் தேர்தலையும் ஆசீர்வதித்து, தமக்குச் சித்தமானவர்களை தெரிந்து கொண்டு, ஆட்சியமைக்க கிரியை செய்ய ஜெபிப்போம்.

4. IIநாளாகமம் 20:1 இதற்குப்பின், மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும், அவர்களோடே கூட அம்மோனியருக்கு அப்புறத்திலுள்ள மனுஷருங்கூட யோசபாத்திற்கு விரோதமாய் யுத்தம் பண்ண வந்தார்கள். இந்தியாவிற்கு விரோதமாய் எழும்பும் பக்கத்து தேச பகைகள் மாற ஜெபிப்போம்.

5. எரேமியா 13:16 அவர் அந்தகாரத்தை வரப்பண்ணும் முன்னும், உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு மகிமையைச் செலுத்துங்கள். நம் தேச ஜனங்கள் சீக்கிரமாய் கர்த்தரை ஆராதித்து, வரக்கூடிய அந்தகாரத்திற்கு தப்பிக்கொள்ளும் போக்கை தேவனிடமிருந்து பெற ஜெபிப்போம்.

6. நீதிமொழிகள் 3:28 உன்னிடத்தில் பொருள் இருக்கையில் உன் அயலானை நோக்கி, நீ போய்த் திரும்பி வா, நாளைக்குத் தருவேன் என்று சொல்லாதே. தேவன் நம் தேச ஜனங்களுக்கு இவ்வசனத்தின்படி நடக்கும் மனதைத் தர ஜெபிப்போம்.

7. யோவேல் 2:28 மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். சீக்கிரமாய் நம் தேசத்தில் பரிசுத்த ஆவி பலமாய் ஊற்றப்பட ஜெபிப்போம்.

### 3. பிசாசின் பிடியில் அகப்பட்டோர் உடனே விடுதலை பெற :

1. லூக்கா 13:13 அவள் மேல் தமது கைகளை வைத்தார். உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள். பலவீனத்தின் ஆவியால் 18 வருடமாய் பாதிக்கப்பட்ட பெண், இயேசுவால் உடனே விடுவிக்கப்பட்டது போல், இப்படிப்பட்ட ஆவியில் பாதிக்கப்பட்டவர்களும் உடனே விடுதலை பெற ஜெபிப்போம்.

2. மாற்கு 9:21 இது இவனுக்கு உண்டாகி, எவ்வளவு காலாயிற்று என்று கேட்டார். அதற்கு அவன், சிறு வயது முதற்கொண்டே உண்டாயிருக்கிறது என்றான். இயேசு அவன் கையைப் பிடித்து அவனைத் தூக்கினார் (மாற்.9:27). உடனே அவன் எழுந்திருந்தான். இப்படிப்பட்ட ஆவியுள்ளவர்கள் உடனே விடுதலை பெற ஜெபிப்போம்.

3. லூக்கா 8:38 பிசாசுகள் நீங்கின மனுஷன் அவரோடேகூட இருக்கும்படி உத்தரவு கேட்டான். வெகுகாலமாய் பிசாசின்பிடியில் அகப்பட்ட மனுஷன் விடுதலை பெற்றது போல, இப்படிப்பட்ட ஆவியை உடையவர்கள் இயேசுவின் நாமத்தில் சுகமடையவும், கர்த்தருக்கு ஊழியம் செய்யவும், அற்புதம் உடனே நடக்கவும் ஜெபிப்போம்.

4. ஆதியாகமம் 3:1 சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி, நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்கள் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. இவ்விதமாக சந்தேகத்தைக் கொண்டு வரும் பிசாசின் தந்திரங்கள் உடனே அழியவும், குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிப்போம்.

5. யோபு 2:2 கர்த்தர் சாத்தானைப் பார்த்து நீ எங்கேயிருந்து வருகிறாய் என்றார். சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக, பூமியெங்கும் உலாவி, அதில் சுற்றித்திரிந்து வருகிறேன் என்றான். இப்படி செயல்படும் சாத்தானின் கிரியைகள் நம் எல்கைகளுக்குள் வராதபடி கர்த்தர் நமக்குப் பாதுகாப்பு கொடுக்க ஜெபிப்போம்.

6. Iநாளாகமம் 21:1 சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி, இஸ்ரவேலைத் தொகையிடுவதற்கு தாவீதை ஏவி விட்டது. சாத்தானின் கிரியைகள் நமக்குள் வராதபடி கர்த்தர் காக்க ஜெபிப்போம்.

### 4. எழுப்புதல் ஜெப ஐக்கியம் இன்னும் ஆசீர்வதிக்கப்பட :

1. எரேமியா 18:1 நீ எழுந்து, குயவன் வீட்டிற்குப் போ. அங்கு என் வார்த்தைகளை உனக்குத் தெரிவிப்பேன் என்றார். எரேமியாவுக்கு வார்த்தையை தெரிவித்த தேவன், நம் ஐக்கியத்திற்கும் தமது வார்த்தையை இன்னும் தெரிவிக்க ஜெபிப்போம்.

2. ஓசியா 12:6 இப்போதும் நீ உன் தேவனிடத்தில் திரும்பு. நம் ஐக்கிய ஊழியத்தின் மூலம் திரளான ஜனங்கள் மனந்திரும்பி ஊழியம் செய்யவும் அவர்கள் மூலம் ஏராளமான ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படவும், விரைவில் ஓர் எழுப்புதல் உண்டாகவும் ஜெபிப்போம்.

3. அப்போஸ்தலர் 5:12 அப்போஸ்தலர்களுடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது. அப்போஸ்தலர் கால தேவனுடைய கிரியைகள் இன்றும் ஐக்கியம் மூலம் நடைபெறவும், எதிர்ப்பு கொடுப்போர் யாவரும் ஊழியத்திற்கு ஜெபிப்போராக மாற ஜெபிப்போம்.

4. தானியேல் 2:19 பின்பு இராக்காலத்தில் தரிசனத்திலே தானியேலுக்கு மறைபொருள் வெளிப்படுத்தப்பட்டது. நம் ஐக்கிய ஜெபங்களிலும் இன்னும் மறைபொருளை தேவன் ஜெபத்தின் மூலம் வெளிப்படுத்த ஜனங்களுக்குள் ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாக ஜெபிப்போம்.

5. Iஇராஜா. 4:34 சாலொமோனின் ஞானத்தைக குறித்துக் கேள்விப்பட்ட பூமியின் சகல இராஜாக்களிடத்திலுமிருந்து நானாஜாதியான ஜனங்களும் அவனுடைய ஞானத்தைக் கேட்கிறதற்கு வந்தார்கள். ஐக்கிய ஊழியத்திலும் இப்படிப்பட்ட தேவனின் கிரியைகள் பலமாய் இந்நாட்களில் நடைபெற ஜெபிப்போம்.

6. உபாகமம் 34:7 மோசே மரிக்கிறபோது, நூற்றிருபது வயதாயிருந்தான். அவன் கண் இருளடையவுமில்லை. அவன் பெலன் குறையவுமில்லை. ஐக்கிய ஊழியங்களுக்கு இப்படிப்பட்ட கிருபைகளைக் கர்த்தர் கொடுக்கவும், ஊழியமும் வளரவும் ஜெபிப்போம்.

### 5. பொதுவான தேவைகளுக்காகவும், அவைகளை தேவன் சந்திக்கவும்:

1. யாத்திராகமம் 14:14 கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார். நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான். இந்த வாக்குத்தத்தம் யாவருக்கும் நிறைவேறவும் இதனால் மிகப்பெரிய அற்புதங்கள் ஜனங்கள் மத்தியில் கர்த்தர் செய்ய ஜெபிப்போம்.

2. மாற்கு 16:4 அந்தக்கல் மிகவும் பெரியதாய் இருந்தது. அவர்கள் ஏறிட்டுப் பார்க்கிற போது, அது தள்ளப்பட்டிருக்கக் கண்டார்கள். ஜனங்களின் மிகப்பெரிய பிரச்சனைகள் மிக அற்புதமாய் கர்த்தர் தீர்க்கவும், இதனால் விசுவாசம் யாவருக்கும் பெருகவும் ஜெபிப்போம்.

3. லூக்கா 9:17 எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். மீதியான துணிக்கைகள் 12 கூடை நிறைய எடுக்கப்பட்டது. நம்முடைய ஊழியத்தின் தேவைகளை தேவன் சந்திக்கவும், மீதி எடுத்து தேவ மகிமை வெளிப்படவும், இதனால் அநேகர் விசுவாசத்துடன் ஜெபிக்கும் கிருபை அடையவும் ஜெபிப்போம்.

4. யோவான் 5:9 உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து போனான். நீண்ட நாள்பட்ட வியாதியஸ்தர்கள் இயேசுவிடம் வரவும், அற்புத சுகம் பெறவும், இந்த அற்புத சுகம் அனைத்து வியாதியஸ்தர்களுக்கும் உண்டாகவும், இயேசுவின் நாமம் மகிமைப்படவும் ஜெபிப்போம்.

5. Iதீமோத்தேயு 6:17 நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும். நாம் அனுபவிக்க சகல நன்மைகளும் தேவனிடத்தில் உண்டு. நாம் அனைவரும் தினமும் ஜெபத்தில் வைத்து தேவனிடம் வைராக்கியமாய் கேட்க ஜெபிப்போம்.

6. உபாகமம் 10:22 உன் பிதாக்கள் எழுபது பேராய் எகிப்துக்குப் போனார்கள். கர்த்தர் உன்னைத் திரட்சியிலே வானத்தின் நட்சத்திரங்களைப் போலாக்கினார். இவ்வசனத்தின்படி கர்த்தர் அனைத்து விசுவாசிகளையும், ஊழியர்களையும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

மே 2024 **தினமும் வேதத்தின் மகத்துவங்களைத் தியானித்து, ஜெபியுங்கள்.**

01.05.24 புதன் : யோசுவா 19:51 கர்த்தருடைய சந்நிதியில் இஸ்ரவேல் புத்திரரின் கோத்திரங்களுக்குச் சீட்டுப்போட்டுக் கொடுத்த சுதந்தரங்கள் இவைகளே. இவ்விதமாய் அவர்கள் தேசத்தைப் பங்கிட்டு முடித்தார்கள். யோசுவா தன்னுடைய பொறுப்புகளை சீட்டுப்போட்டு பங்கிட்டதுபோல நம்முடைய குடும்பத்திலும், ஊழியத்திலும் இன்னும் தீராத பிரச்சனைகளை சீட்டுப்போடுதல் மூலம் சமாதானமாக முடித்துக் கொள்ளலாம். இந்த விசுவாசம் நமக்கு இருந்தால் நம்முடைய பிரச்சனைகளை எளிதாய் ஜெயிக்கலாம்.

02.05.24 வியாழன் : நியாயாதிபதிகள் 11:11 அப்பொழுது யெப்தா கீலேயாத்தின் மூப்பரோடே கூடப்போனான்; யெப்தா தன் காரியங்களையெல்லாம் மிஸ்பாவிலே கர்த்தருடைய சந்நிதியிலே சொன்னான். அதைப்போல நம்முடைய பாரங்கள் எல்லாவற்றையும் கர்த்தரிடம் சொல்லுவோமாக. யெப்தா ஜெயம் பெற்றதுபோல நமக்கும் தேவன் ஜெயம் தருவார். கர்த்தரிடம் எல்லாக் காரியங்களையும் நாம் சொல்ல வேண்டும். கர்த்தர் ஏற்ற வேளையிலே நம் விண்ணப்பங்களுக்கு பதில் அளித்து நம்மை உயர்த்துவார்.

03.05.24 வெள்ளி : ரூத் 4:16 நகோமி அந்தப் பிள்ளையை எடுத்து, தன் மடியிலே வைத்து, அதை வளர்க்கிற தாயானாள். கசப்பான வாழ்க்கை வாழ்ந்த நகோமிக்கு மகிழ்ச்சியான வாழ்க்கையை கர்த்தர் கட்டளையிட்டார். ஓபேத்தை வளர்க்கிற தாயாக மாறி தன்னுடைய கவலைகளையெல்லாம் மறக்க கிருபை பெற்றாள். அதுபோல நம்முடைய கசப்பான வாழ்க்கை சீக்கிரமாக மாறும். அந்த வேளைக்காக பொறுமையுடன் காத்திருங்கள். கர்த்தர் நம்மை இன்னும் சிறப்பான வழியில் நடத்துவார். அந்த வழி நமக்கு போதுமானதாக இருக்கும்.

04.05.24 சனி : I சாமுவேல் 2:26 சாமுவேல் என்னும் பிள்ளையாண்டானோ, பெரியவனாக வளர்ந்து, கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்துகொண்டான். கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாய் நடப்பது ஒரு கடினமான பணியாகும். இந்தப் பணியை சாமுவேல் செய்து முடித்ததுபோல நமக்குத் தேவன் வைத்திருக்கும் கிருபைகளை பயன்படுத்தி எல்லாருக்கும் பிரியமாக நடக்க ஜெபத்துடன் முயற்சிக்க வேண்டும். கர்த்தர் நம் பிரயாசங்களை ஆசீர்வதித்து எல்லாருக்கும் பிரயோஜனமான பாத்திரமாய் நம்மை மாற்றுவார்.

05.05.24 ஞாயிறு : II சாமுவேல் 3:39 நான் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டவனாயிருந்தபோதிலும், நான் இன்னும் பலவீனன். தாவீது உயர்ந்த அனுபவங்களைப் பெற்றவராக இருந்தாலும் குறிப்பாக ராஜாவாக பதவி உயர்த்தப்பட்டாலும், தன்னை ஒரு பலவீனனாகவே காண்பித்து கொண்டார். அந்த தாழ்மை அவருடைய உயர்வுக்கு காரணமாக மாறியது. கர்த்தர் நம் எல்லாரையும் உயர்த்த வேண்டுமானால் தாவீதைப்போல இவ்வாறு நாம் மனதளவில் கூறவேண்டும். அப்போது கர்த்தர் நம்மை ஏற்றக்காலத்தில் உயர்த்துவார்.

06.05.24 திங்கள் : I இராஜாக்கள் 4:29 தேவன் சாலொமோனுக்கு மிகுதியான ஞானத்தையும் புத்தியையும், கடற்கரை மணலத்தனையான மனோவிருத்தியையும் கொடுத்தார். இதே கிருபைகள் நம் அனைவருக்கும் எப்போதும் தேவையாய் இருக்கிறபடியால் இந்தப் பகுதிகளில் உள்ள ஆசீர்வாதங்களை தேவன் நமக்குத் தந்து கடினமான பிரச்சனைகள் நமக்கு வரும்போது எளிதாக ஜெயித்துக் கொள்ள தேவன் சாலொமோனுக்கு உதவி செய்தது போல நிச்சயம் நமக்கும் உதவி செய்வார். தேவ ஞானம் நமக்கு இன்னும் தேவை.

07.05.24 செவ்வாய் : II இராஜாக்கள் 5:11 அதற்கு நாகமான் கடுங்கோபங்கொண்டு, புறப்பட்டுப்போய், அவன் வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுது, தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய் குஷ்டரோகத்தை நீக்கி விடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன். நாகமான் ஆரம்ப நாட்களில் மிக பெருமையோடு நடந்து கொண்டார். அப்போது அவருக்கு அற்புதம் நடக்கவில்லை. என்றைக்கு தன்னைத் தாழ்த்தினாரோ அன்றைக்கு அற்புத சுகத்தைப்பெற்றுக் கொண்டார். நமக்கும் தாழ்மை தேவை.

08.05.24 புதன் : I நாளாகமம் 15:29 கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி தாவீதின் நகரமட்டும் வந்தபோது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் பலகணிவழியாய்ப் பார்த்து, தாவீது ராஜா ஆடிப்பாடி வருகிறதைக் கண்டு, அவனைத் தன் இருதயத்திலே அவமதித்தாள். தேவ மனிதர்களை ஒரு போதும் யாரும் அவமதிக்கக்கூடாது. மீகாள் தாவீதை அவமதித்ததால் குறைவுபடத் தொடங்கினாள். இப்படிப்பட்ட சுபாவங்கள் நம்மை விட்டு விலக கருத்துடையவர்களாக வாழ வேண்டும்.

09.05.24 வியாழன் : II நாளாகமம் 14:12 அப்பொழுது கர்த்தர் அந்த எத்தியோப்பியரை ஆசாவுக்கும், யூதாவுக்கும் முன்பாக முறிய அடித்ததினால் எத்தியோப்பியர் ஓடிப்போனார்கள். நமக்கு வரும் போராட்டங்களுக்கு ஜெயங்கிடைப்பதற்கு கர்த்தருடைய துணை நமக்கு வேண்டும். ஆசா அவ்வாறு

ஜெபித்ததால் அதிக படைகள் உள்ள ராஜாவை மிக எளிதாக ஜெயித்தார். நம்முடைய குடும்பத்திலும் சாத்தானின் ஆவி போராடும் போது ஆசா ராஜா போல ஜெபத்தில் வைத்து விட்டால் கர்த்தர் ஜெயத்தை தருவார்.

10.05.24 வெள்ளி : எஸ்றா 3:6 ஏழாம் மாதம் முதல்தேதியில் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தத் தொடங்கினார்கள்; ஆனாலும் கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரம் இன்னும் போடவில்லை. கர்த்தருடைய பணியை செய்த எஸ்றா உற்சாகமாக காணப்பட்டது போல நம்முடைய உலக பாடுகளையும், ஊழியங்களையும் இன்னும் உற்சாகமாக செய்ய அழைக்கப்பட்டுள்ளோம். மனச்சோர்வுகள் வந்தாலும் அவைகளை நம்மைவிட்டு அகற்றிவிட்டு கர்த்தர் தந்த பணியை மாத்திரம் செய்து முடிக்க வேண்டும்.

11.05.24 சனி : நெகேமியா 13:31 என் தேவனே எனக்கு நன்மையுண்டாக என்னை நினைத்தருளும். உலகத்தில் உள்ள நம்முடைய சொந்த பந்தங்கள் எல்லாம் ஒரு நாளில் நம்மை மறந்துவிடுவார்கள். ஆனால் கர்த்தர் ஒருவரே நம்மை எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிறவர். இதை உணர்ந்த நெகேமியா தேவனே நீர் என்னை நினைத்தருளும் என்று ஜெபித்ததால் கர்த்தர் நெகேமியாவின் நாட்களை விசேஷித்த ஆசீர்வாதத்தினால் நடத்தினார். நம்மையும் தேவன் நினைத்துக் கொண்டிருக்கிறார்.

12.05.24 ஞாயிறு : எஸ்தர் 4:14 நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும் என்று சொல்லச்சொன்னான். எஸ்தர் தன்னுடைய ராஜமேன்மையை யூத குல ஆசீர்வாதத்திற்காக பயன்படுத்தினது போல கர்த்தர் நமக்கு கொடுத்த சகல ஆசீர்வாதங்களையும் மற்றவர்களின் நலனுக்காக அதிகமாக பயன்படுத்த வேண்டும். அப்போது அநேகர் பயன் அடைவார்கள். நம்மை நாமே ஆராய்ந்து இந்த வசனத்திற்கு கீழ்ப்படிவோம். கர்த்தர் நம்மை நடத்துவார்.

13.05.24 திங்கள் : யோபு 5:9 ஆராய்ந்து முடியாத பெரிய காரிங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார். வேதத்தில் எராளமான வாக்குத்தத்தங்கள் உண்டு. நாம் அந்த வாக்குத்தத்தங்களை விசுவாசித்து ஜெபிக்கும் போது வாக்குத்தத்தம் நிறைவேறுவதை நாம் காணலாம். யோபு இப்படியாக வாழ்ந்து இருமடங்கு ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டான். நாமும் சூழ்நிலைகளை பாராமல் வசனத்தை மாத்திரம் விசுவாசிப்போம். கர்த்தர் வார்த்தையின்படியே நம்மை நடத்துவார்.

14.05.24 செவ்வாய் : சங்கீதம் 25:12 கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்து கொள்ளும் வழியைப் போதிப்பார். ஆபிரகாம் கர்த்தருக்கு பயந்து வாழ்ந்ததினால் தான் போக வேண்டிய சரியான பாதையை கர்த்தரிடம் பெற்றுக் கொண்டார். ஒருவேளை இந்த நாள் ஒரு வழியும் இல்லாத ஒரு நாளாக இருந்தாலும் கர்த்தர் ஒரு சிறப்பான பாதையை நமக்குக் காட்டுவார். என் பாதை இருளாக இருக்கின்றதே என்று நமக்குள்ளாக சோர்ந்து போக வேண்டாம். இயேசு ஜீவிக்கிறார். அவர் பெரியவர்.

15.05.24 புதன் : நீதிமொழிகள் 24:16 நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான். நீங்கள் இன்று விசுவாச ஜீவியத்தில் விழுந்து போன நிலையில் இருந்தாலும் உங்களை உயிர்ப்பிக்க தேவனால் கூடும். விழுந்த போன நிலைக்கு சென்றுகொண்டிருந்த எலியாவை வல்லமையாக பயன்படுத்தின ஆண்டவர் உங்களுக்கும் இரக்கம் செய்து இன்னும் சிறப்பாக பயன்படுத்துவார். குடும்பத்தின் சூழ்நிலை கண்டு மனம் கலங்க வேண்டாம். குடும்பத்தை எப்படி நடத்த வேண்டும் என்று தேவன் அறிவார்.

16.05.24 வியாழன் : பிரசங்கி 5:2 தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக. தேவனுடைய பிள்ளைகள் தன்னுடைய ஜெபவேளையாய் அதிகமாக்கி கொள்ள வேண்டும். அப்போது நாம் பேசும் வார்த்தைகள் சுருக்கமாகவும், கருத்தாகவும் மாறிவிடும். ஆயக்காரனுடைய சுருக்கமான ஜெபம் அவரை நீதிமானாக மாற்றிவிட்டது. பரிசேயருடைய நீண்ட ஜெபம் கேட்கப்படாமல் போய்விட்டது. இன்னும் அதிகமாக வேதம் வாசித்து ஜெபிப்போம்.

17.05.24 வெள்ளி : உன்னதப்பாட்டு 7:12 அதிகாலையிலே திராட்சத்தோட்டங்களுக்குப் போவோம். விசுவாசிகளும், ஊழியர்களுமாகிய நாம் அனைவரும் அதிகாலையில் எழுந்து தேவனை தேடும் பழக்கத்தை விட்டுவிடக்கூடாது. யோசுவா ஜனங்களை வழிநடத்தும் போது அதிகாலையில் எழுந்து செயல்பட்டதால் யோர்தானை கடக்கவும், தோல்வியடைந்த இடத்தில் ஜெயம் பெறவும் கர்த்தருடைய கிருபை அவரை தாங்கிற்று. இது போல நீங்கள் தோல்வி அடைந்த இடம் எதுவானாலும் அதை கர்த்தரிடம் கூறுங்கள்.

18.05.24 சனி : ஏசாயா 40:31 அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள். பவுல் அப்போஸ்தலன் தன்னுடைய விசுவாச ஓட்டத்தில் ஆரம்ப நாள்முதல் நிறைவு நாள் வரை உற்சாகமாக ஓடி ஊழியத்தை நிறைவு செய்தார். அவருக்கு தேவனே பெலன் கொடுத்தார். அதைப்போல ஆண்டவர் நமக்கு பெலன் தந்து அனுதினமும் விசுவாச வாழ்க்கையில் ஓட கிருபை தருவார். இனி என்னால் முடியாது என்று நாமே நமக்கு ஒரு முடிவை ஏற்படுத்தக்கூடாது அழைத்த தேவன் இன்னும் நம்மை நடத்துவார்.

19.05.24 ஞாயிறு : எரேமியா 17:9 எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்? நம்முடைய இருதயத்தை அறியக்கூடிய அறிவை தேவன் இன்னும் நமக்கு தரவேண்டும். தாவீது தன்னுடைய இருதயத்தை சுத்திகரித்தப்படியால் அவருடைய பின்வாழ்க்கை ஆசீர்வாதமாக இருந்தது. நம்முடைய இருதயத்தை அறியக்கூடிய கிருபையை தேவனிடம் பெற்றுக் கொண்டு செயல்படுவோமாக. நம்முடைய பின் வாழ்க்கை இன்னும் ஆசீர்வாதமாக மாறும்.

20.05.24 திங்கள் : புலம்பல் 3:49,50 கர்த்தர் பரலோகத்திலிருந்து நோக்கிப்பார்க்குமட்டும், என் கண் இடைவிடாமல் ஓய்வின்றிச் சொரிகிறது. கர்த்தர் உங்களை இன்னும் நோக்கிப்பார்க்காவிட்டாலும், நிச்சயமாக ஒரு நாளில் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் கர்த்தர் கண்நோக்கிப்பார்த்து ஆசீர்வதிப்பார். அதுவரை பொறுமையோடு இருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். அன்னாளுடைய கண்ணீர் ஒரு நாள் துடைக்கப்பட்டதை நாம் வேதத்தில் காண்கிறோம். அதைப்போல நம்முடைய கண்ணீர் துடைக்கப்படும் நாள் ஒன்று உண்டு.

21.05.24 செவ்வாய் : எசேக்கியேல் 2:7 கலகக்காராகிய அவர்கள் கேட்டாலும், சரி, கேளாவிட்டாலும் சரி, நீ என் வார்த்தைகளை அவர்களுக்குச் சொல்லு. சாமுவேல் என்ற ஊழியர் மூலமாக தேவ வார்த்தை ஜனங்களுக்கு சென்ற போது அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அவர் கூறிய தேவ வார்த்தையை ஜனங்கள் உணரத்தக்கக்கூடிய சூழ்நிலையை கர்த்தர் கொடுத்தார். அது போல நாம் சொன்ன வார்த்தையை ஜனங்கள் கேட்கவில்லையே என்று எண்ண வேண்டாம். ஏற்ற வேளையில் ஊழியத்தில் எழுப்புதல் உண்டாகும்.

22.05.24 புதன் : தானியேல் 12:3 அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள். நீதிக்குட்படுத்துகிற ஊழியம் என்பது ஆத்தும ஆதாய பணியாகும். அந்த பணி மூலமாக அநேகர் இரட்சிக்கபட்டிருக்கலாம். அவர்களை குறித்து எந்த தகவலும் இல்லாவிட்டாலும், குறிப்பிட்ட நாளில் நற்செய்தி கிடைக்க கர்த்தர் உதவிச்செய்வார். நம்மூலம் சந்திக்கப்பட்ட ஆத்துமாக்களுக்காக ஜெபிக்க மறக்கக் கூடாது. பேதுருவின் ஊழியம் இப்படியாக இருந்தது.

23.05.24 வியாழன் : ஓசியா 14:2 வார்த்தைகளைக்கொண்டு கர்த்தரிடத்தில் திரும்புங்கள். இளைய குமாரன் தகப்பனின் வார்த்தையை நம்பி நல்வாழ்வு பெற்றார். இதைப்போல நாம் அனைவரும் கர்த்தருடைய வார்த்தையை வேதத்திலிருந்து வாசித்து இன்னும் அதிகமாக நம்மை பலப்படுத்திக்கொள்ள வேண்டும். பெரேயா பட்டணத்து ஜனங்கள் வார்த்தையை விசுவாசித்து தங்களை பெலப்படுத்திக் கொண்டார்கள். வார்த்தைகளை நம்பி நாம் வாழ அழைக்கப்பட்டுள்ளோம்.

24.05.24 வெள்ளி : யோவேல் 2:29 ஊழியக்காரர்மேலும், ஊழியக்காரிகள்மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். உலகமெங்கும் உள்ள ஊழியர்கள் மீது தேவ ஆவி ஊற்றப்பட வேண்டும். அப்போது பெந்தெகோஸ்தே நாளின் அனுபவம் அவர்கள் எல்லாருக்கும் கிடைக்கும். நமக்கும் நிச்சயம் கிடைக்கும். இப்படி கிடைக்கும் போது ஜனங்கள் மத்தியில் மனந்திரும்புதல் உண்டாகும். நம் அனைவர் மேலும் இந்த ஆவியின் வல்லமை அதிகமாக கிடைத்து கர்த்தரால் பயன்படுத்தும் ஊழியர்களாக மாறுவோம்.

25.05.24 சனி : ஆமோஸ் 8:11 கர்த்தருடைய வசனம் கேட்கக் கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்கிறார். இந்த பஞ்ச நாட்கள் வரும் முன்னால் நாம் அனைவரும் ஆண்டவருக்கு சாட்சியாக மாறி அநேகரை சத்திய வசனத்திற்கு நேராக வழி நடத்த கடமைப்பட்டுள்ளோம். அப்போது வசனம் கிடைக்காத பஞ்சகாலம் வந்தாலும், இருதயத்திலிருந்து வசனம் கிரியை செய்யும். ஒருவரும் சோர்ந்து போக வேண்டிய அவசியம் கிடையாது. லூக்கா 18:1 ன்படி சோர்ந்து போகாமல் ஜெபிக்க பழகிக்கொள்வோம்.

26.05.24 ஞாயிறு : ஒபதியா 1:4 நீ கழுகைப்போல உயரப்பேனாலும், நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத்தள்ளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நம் அனைவருக்கும் நம்பிக்கை வேண்டும். அதே வேளையில் அளவுக்கு மிஞ்சின விருப்பம் நமக்குத் தேவையில்லை. நேபுகாத்நேச்சார் இவ்விதமாக வாழ்ந்து அழிவைத் தான் கண்டார். அனுதினமும் நாம் நம்மை ஆண்டவரிடம் அர்ப்பணிப்போம். கர்த்தர் நம்மை அவர் சித்தப்படி வழிநடத்துவார்.

27.05.24 திங்கள் : யோனா 1:17 யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார். அது போல நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் சரியாக வழிநடத்த ஏற்ற வழிகளை தேவன் ஆயத்தப்படுத்தியிருக்கிறார். இந்த வழி இப்போது தெரியாவிட்டாலும், ஏற்ற வேளையில் தேவன் அதை விளங்கப்பண்ணுவார். இந்த வழிகளை நாம் காத்திருந்து ஜெபிப்பதின் மூலமாக தெளிவாக கண்டு கொள்ள முடியும். நமக்கு நியமித்த ஓட்டத்தில் நாம் பொறுமையுடன் ஓடிக்கொண்டேயிருக்க வேண்டும்.

28.05.24 செவ்வாய் : மீகா 3:8 நானோ, யாக்கோபுக்கு அவன் மீறுதலையும், இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கும்படி, கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும், நியாயத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன். இந்த வசனத்தை வைத்து இன்றைக்கு நாம் அனைவரும் இருக்கிற இடத்தில் ஜெபிப்போம். இந்த நாட்களில் கர்த்தர் இவ்விதமாக நம்மை நடத்தினால் நல்லது. நம்முடைய விருப்பத்தை தேவன் அறிவார். தீர்க்கர்களை பயன்படுத்தும் தேவன் நம்மையும் வழி நடத்துவார்.

29.05.24 புதன் : நாகூம் 2:12 சிங்கம் தன் குட்டிகளுக்குத் தேவையானதைப் பீறி, தன் பெண் சிங்கங்களுக்கு வேண்டியதைத் தொண்டையைப் பிடித்துக் கொன்று, இரைகளினால் தன் கெபிகளையும், பீறி போட்டவைகளினால் தன் தாபரங்களையும் நிரப்பிற்று. சிங்கம் தன்னுடைய குட்டிகளுக்கு ஆகாரத்தை சேமிப்பது போல நம் தேவன் நம்மை வழிநடத்துவதற்கு அநேக சேமிப்புகளை வைத்திருக்கிறார். அவைகளை நமக்குத் தந்து நடத்துவார். நாம் விசுவாசம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

30.05.24 வியாழன் : ஆபகூக் 2:20 கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்; பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக்கடவது. ஆலயத்தை பரிசுத்தமாக எண்ணி நாம் ஜெபிக்க வேண்டும். அன்னாள் இப்படியாக ஆலயத்தில் ஜெபித்தபோது அவள் ஜெபித்த ஜெபத்திற்கு விசேஷமான பதில் கிடைத்தது. நாமும் ஆலயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அடிக்கடி சென்று ஜெபிக்க வேண்டும். அநேகர் ஆச்சரியப்படக்கூடிய அளவிற்கு தேவன் பதில்கொடுப்பார். இதற்கு தாமதிக்கக் கூடாது.

31.05.24 வெள்ளி : செப்பனியா 1:14 கர்த்தருடைய பெரிய நாள் சமீபித்திருக்கிறது; அது கிட்டிச்சேர்ந்து மிகவும் தீவிரித்துவருகிறது. இந்த கர்த்தருடைய நாளை நாம் காண வாஞ்சிக்க வேண்டும். இயேசு வருகிறார் என்ற செய்தியை உலகமெங்கும் எடுத்துச் செல்ல வேண்டும். அப்போது தேவன் நம்மை இன்னும் விசேஷமாக வழிநடத்தக்கூடிய கிருபைகளையும், வரங்களையும் நமக்குத் தருவார். நம்முடைய தாகம் அனைத்தும் இயேசுவின் வருகையை குறித்ததாக இருக்க வேண்டும். அதற்குத் தக்கப்படி தேவன் நம்மை நடத்துவார்.

## மார்ச் மாத ஊழியப் பகிர்மானங்கள்

1. 02-03-24 - சனிக்கிழமை, மருதுபுரம் CSI சபை, கன்வென்ஷன் கூட்டம்
2. 02,03-03-24 சனி, ஞாயிற்றுக்கிழமை, சிவசைலனூர் CSI சபை, கன்வென்ஷன் கூட்டம்
3. 03-03-24 ஞாயிற்றுக்கிழமை, பாவூர்சத்திரம், ஷாலோம் ஸ்கூல், சிறப்பு ஜெபம்
4. 04-03-24 திங்கள்கிழமை, கன்னியாகுமரி, மூப்பர்கள் கூடுகை ஜெபம்
5. 06-03-24 புதன்கிழமை, கடைசிக்கால அபிஷேக ஜெபம், சுரண்டை
6. 09-03-24 - சனிக்கிழமை, உபவாச ஜெபம், சுரண்டை
7. 10,11-03-24 - ஞாயிற்றுக்கிழமை, திங்கள்கிழமை, சென்னை ஊழியங்கள் - பல இடங்களில்
8. 14,21-03-24 - ஞாயிற்றுக்கிழமை, சுகமளிக்கும் ஆராதனை, கடையம்
9. 15-03-24 - வெள்ளிக்கிழமை,காத்திருப்பு ஜெபம், சுரண்டை
10. 16,17-03-24 - சனி, ஞாயிறு அதிசயபுரம் CSI சபை, கன்வென்ஷன் கூட்டம்
11. 17-03-24 - ஞாயிற்றுக்கிழமை, இடையன்குடி CSI சபை, கன்வென்ஷன் கூட்டம்
12. 20-03-24- புதன்கிழமை, கோவில்குளம் CSI சபை, கன்வென்ஷன் கூட்டம்
13. 23-03-24 - சனிக்கிழமை, அதிசயபுரம் CSI சபை, உபவாச ஜெபம்
14. 24-03-24 - ஞாயிற்றுக்கிழமை, பாவூர்சத்திரம் CSI சபை, கன்வென்ஷன் கூட்டம்
15. 27-03-24 - புதன்கிழமை, பௌர்ணமி ஜெபம், சுரண்டை

**மேற்கண்ட அனைத்து ஊழியங்களிலும் ஆவியானவர் கிரியை செய்தார்.**
**தேவனுக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.**

பெண்கள் பகுதி

# பவுலினால் பாராட்டப்பெற்ற பெண் பெர்சியாள். ரோமர் 16:12

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதத்தில் இச்செய்தியின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட பெர்சியாள் என்று பவுலினால் பாராட்டப்பட்ட சகோதரியைப் பற்றி தியானிப்போம். அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் ரோமாபுரியாருக்கு எழுதின நிருபம் 16ஆம் அதிகாரம் 12 ஆம் வசனத்தில் கூறப்பட்டுள்ள ஸ்திரீயின் பெயர்தான் பெர்சியாள். அவளைப் பற்றி ஒரு வசனத்தில் பாதி வசனத்தில் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவளிடம் காணப்பட்ட நற்குணத்தினால் தான் பவுல் அப்போஸ்தலன் இப்படியாக எழுதுகிறார். கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட பிரியாமான பெரிசியாளை வாழ்த்துங்கள் என எழுதுகிறார். ஒவ்வொரு நிருபமும் முடிக்கப்படும் பொழுது அந்தந்த இடத்தில் உள்ள முக்கியமான ஊழியர்களுக்கு வாழ்த்து சொல்வது ஒரு வழக்கமாகும். அதன்படி இந்தப் பெர்சியாளையும் பவுல் ரோமர் நிருபத்தில் வாழ்த்துகிறார்.

## முதலாவதாக கர்த்தருக்கள் மிகவும் பிரயாசப்பட்ட பெர்சியாள் : ரோமர் 16:12

ரோமருக்கு எழுதின நிருபத்தை முடிக்கப் போகும் பொழுது தன் ஊழியத்தில் தனக்கும், கர்த்தருக்கும் உதவியாக இருந்தவர்களுக்கு வாழ்த்துச் சொல்லி எழுதும் பொழுதுதான் கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட பெர்சியாளை வாழ்த்துங்கள் என எழுதுகிறார். அப்படியானால் கண்டிப்பாக இந்தப்பெண் கர்த்தருக்காக மிகவும் பிரயாசப்பட்டிருப்பாள் என்பது உறுதியாகிறது. கர்த்தரின் ஊழியம் வளருவதற்கு அந்தநாட்களில் எந்தக் காரியங்களில் எல்லாம் பிரயாசப்பட வேண்டுமோ அதில் மிகவும் பிரயாசப்பட்டிருக்கிறாள் இந்தப்பெண். சுவிசேஷம் செல்வதற்கு எந்தெந்த உதவித் தேவையோ அவைகளையெல்லாம் நிறைவேற்றி பவுலுக்கு எந்தெந்த வழிகளிலெல்லாம் உதவி செய்து பிரயாசப்பட வேண்டுமோ அந்த அளவு உதவி செய்து உறுதுணையாக இருந்திருப்பாள். மேலும் கர்த்தரின் ஊழியம் வளர மிகவும் பிரயாசப்படுகிறவளாக காணப்பட்டாள். பெண்களாகிய நாமும் நம்முடைய ஊழியங்களில் இன்னும் கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்படுகிறவர்களாகக் காணப்பட வேண்டும். இன்னும் அநேகரை கிறிஸ்துவுக்குள் கொண்டு வர வேண்டும். முதலாவது நம் வீட்டாரை ஆயத்தப்படுத்த வேண்டும். நம்முடன் படிக்கிறவர்களை ஆயத்தப்படுத்தவேண்டும். ஒவ்வொருவருடைய இரட்சிப்பும் நிறைவேறப் பிரயாசப்படவேண்டும். கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட பெர்சியாள் போல நாமும் மிகவும் பிரயாசப்படுவோம். அநேகரை இயேசுவண்டை சேர்ப்போம். ஆமென்.

## இரண்டவதாக கர்த்தருக்குள் பிரியமான பெர்சியாள்: ரோமர் 16:12

கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட பிரியமான பெர்சியாள் என இவ்வசனத்தில் எழுதப்பட்டுள்ளது உண்மையாகவே இந்த மகள் மற்றவர்களுக்கும், இயேசுவுக்கும், ஊழியருக்கும் பிரியமான மகளாகக் காணப்பட்டிருக்கிறாள். சாமுவேல் வளர்ந்து கர்த்தருக்கும், மனிதருக்கும் பிரியமாய் நடந்து கொண்டான் (1சாமு.2:26) என்று எழுதப்பட்டுள்ளபடி இந்த மகளும் எல்லோரிடமும் பிரியமாய் நடந்து வந்திருக்கிறாள் என்று தான் நமக்குத் தெரிகிறது. பவுல் தன் நிருபத்தில் பாராட்டி எழுதியிருக்கிறார் என்றால் கண்டிப்பாக இந்த மகள் கர்த்தருக்கும், ஊழியருக்கும், மற்றவர்களுக்கும் பிரியமான வாழ்க்கை வாழ்ந்திருக்கிறாள். இது மிகவும் கடினமான காரியம். ஆனாலும் இந்த மகள் பிரியமானவளாக வாழ்ந்திருக்கிறாள். பவுல் அப்போஸ்தலனின் ஊழியத்தில் அவர் செய்கிற ஊழியத்தை அவரோடு சென்று கர்த்தருக்குப் பிரியமான வழிகளில் ஊழியஞ் செய்திருப்பாள். இதை தியானிக்கிற நாமும் நம் வாழ்வில் கர்த்தருக்கும் மற்றும் நம் குடும்பத்திற்கும் பிரியமாக வாழ அர்ப்பணிப்போம். கர்த்தரிடம் அதற்கான கிருபையையும், பெலனையும் கேட்போம். பெர்சியாளைப் போல, பெண்களாகிய நாமும் முதலாவது கர்த்தருக்குப் பிரியமாய் நடப்போம், நம் வீட்டில் கணவரிடம், பிள்ளைகளிடம் பிரியமாய் நடப்போம், அன்பைக் கூட்டுவோம். நாம் வேலை செய்கிற, ஊழியஞ் செய்கிற எல்லா இடங்களிலும் பிரியமாய் நடப்போம். கர்த்தரும் நம் பேரைச் சொல்லி பிரியமான மகள் என அழைப்பார். ஆமென்!

## மூன்றாவது கர்த்தரைப் பிரசித்தம் பண்ணின பெர்சியாள்: ரோமர் 16:12

அநேக ஊழியஞ்செய்து பல சபைகளை ஸ்தாபித்த பவுல் கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட பிரியமான பெர்சியாளை வாழ்த்துங்கள் என்று சொன்னார் என்றால், அவள் கர்த்தரைப் பற்றி அநேகருக்குப் பிரசித்தம் பண்ணியிருப்பாள். ஊழியஞ்செய்திருப்பாள், அநேகரை கர்த்தருக்குள் நடத்தியிருப்பாள். அப்பொழுது தான் அவளைப் பற்றி கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட பெர்சியாள் என சொல்ல முடியும். சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் திருவசனத்தை ஜாக்கிரதையாய் பிரசங்கம் பண்ணு என்று பவுல் சொன்ன வசனத்தின்படி இந்த மகள் திருவசனத்தைப் பிரசித்தம் பண்ணிருப்பாள். பெண்களாகிய நாமும் கர்த்தரைப் பற்றி அறியாத மக்களுக்கு சொல்வது நம் கடமை, முதலாவது நம் குடும்பத்தில், பணி செய்யும் இடத்தில், பழகுகிற மக்களிடத்தில் இயேசுவைப் பற்றி சொல்லுவோம். நாமும் பெர்சியாளைப் போல பிரசித்தம் பண்ணுவோம். அநேகரை ஆதாயம் செய்வோம். பெர்சியாளைப் போல கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்படுவோம், கர்த்தருக்கும், மனிதருக்கும் பிரியமான வாழ்க்கை வாழ்வோம். கர்த்தரை அநேகருக்கு பிரசித்தப்படுத்துவோம். கர்த்தர் நம்மையும், நம் ஊழியத்தையும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக. ஆமென்.

எழுப்புதல் ஜெப ஐக்கியம், சுரண்டை.

# வேதாகமம் கூறும் கடைசிக்கால சம்பவங்கள்

## ஆசியாவிலிருக்கிற சர்தை சபை. வெளி. 3:1-6

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, ஆசியாவிலிருக்கிற சபைகளுக்குள் சர்தை சபையின் நிலைமையையும், இதன் நடுவில் நாம் எப்படியிருக்க வேண்டும் என்பதையும், நம்முடைய குடும்பம், சபைகள் நிலைமையையும் வெளி.3:1-6 வரை உள்ள வசனங்களில் தியானித்து, நம்மை இன்னும் தகுதிப்படுத்திக் கொள்வோமாக. ஆமென்.

சர்தை சபையின் நிலைமை வேதத்தில் நாம் வாசிக்கும்போது, சபையானது உயிர் உள்ளது போல காணப்பட்டாலும், செத்த நிலையில் தான் இருந்ததாக வெளி.3:2ல் நாம் வாசிக்கின்றோம். எனவே, சபை விழிப்படைய வேண்டிய காலம் இதுவாகும். உன் கிரியைகள் தேவனுக்கு முன்பாக நிறைவுள்ளதாக நான் காணவில்லை என்று ஆவியானவர் கூறுகின்றார். இன்றைய விசுவாசிகளாகிய நாம் அனைவரும் நம்முடைய கிரியைகளை பரிசுத்தப்படுத்த வேண்டும். இன்றைய சூழ்நிலையில் நாம் சரியாய் மனந்திரும்பாவிட்டால், திருடனைப் போல நான் உன்மேல் வருவேன் என்று வெளி.3:3ல் வாசிக்கின்றோம். இவ்வசனங்களை நாம் தியானிக்கும் போது, நாம் இன்னும் உண்மையாய் மனந்திரும்ப அழைக்கப்படுகிறோம்.

சர்தை சபையில் சில குறைகள் காணப்பட்டாலும், சிலபேர் பரிசுத்தமான நிலையில் இருப்பதாய் 3:4 வாசிக்கின்றோம். நாமும் பரிசுத்தமான நிலைக்கு இன்னும் அழைக்கப்பட்டுள்ளோம். பரிசுத்தமாய் இருக்கிறவன் இன்னும் பரிசுத்தமாய் இருக்கட்டும் என்று வேதம் கூறுகின்றது. நாம் பரிசுத்தமாய் இருந்தால் தேவன் அற்புதங்களை நமக்குச் செய்வார் என்றும் வேதம் கூறுகின்றது. ஜெயம் உள்ள வாழ்க்கை நமக்குள் இருந்தால், ஜீவபுத்தகத்திலிருந்து நம்முடைய நாமம் கிறுக்கிப் போடமாட்டார் என்றும் ஆவியானவர் கூறுகின்றார். சபையில் உள்ள நிறை மற்றும் குறைகளை ஆவியானவர் கூறும்போது, அவைகளை நாம் ஏற்றுக் கொண்டு, குறைகளை நம்மை விட்டு விலக்க வேண்டும். ஆவியானவர் சபைக்கு கூறுவதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றும் 3:6ல் நாம் வாசிக்கின்றோம்.

இக்கடைசிக் காலத்தில் விசுவாசிகளும், ஊழியர்களுமான நாம் அனைவரும் மிக கவனமாய் வாழ்ந்து, நம்முடைய விசுவாச வாழ்க்கையை இன்னும் அதிகமாய் கூட்ட வேண்டும். ஆவியானவர் என்னென்ன சொல்லுகிறாரோ அவைகளை நாம் கவனித்து கேட்டு நடக்க வேண்டும். I யோவான் 2:27 ல் ஆவியானவர் வழி நடத்துதல் குறித்து கவனமாக கூறப்பட்டுள்ளது. அபிஷேகம் போதித்தபடியே, அவரில் நிலைத்திருப்பீர்களாக என்று வேதம் கூறுகின்றது. சர்தை சபையில் கூறப்பட்டுள்ள ஆவியானவரின் நடத்துதலுக்கு கீழ்படிந்த பவுலையும், சற்று விலகிப்போன கிதியோனையும் பற்றி தொடர்ந்து தியானிப்போம்.

**ஆவியானவர் நடத்துதலுக்கு கீழ்ப்படிந்த பவுல்:** பவுல் மனந்திரும்பிய ஆரம்ப நாட்களில் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொண்டார். அந்த ஆவியானவர் பவுலை ஒவ்வொரு சூழ்நிலையிலும் வழிநடத்தினார். ஆவியானவர் ஓரிடத்திற்கு போகச் சொன்னால் தாமதமின்றி போவார். போக வேண்டாம் என்று ஆவியானவர் கூறும்போது, தன்னுடைய பிரயாசத்தை மாற்றிக் கொள்வார். உதாரணமாக, பவுல் மற்றும் ஊழியர்கள் பிரிகியா, கலாத்தியா நாடுகளை கடந்து போனபோது, ஆசியாவில் வசனத்தைச் சொல்லாதபடிக்கு பரிசுத்த ஆவியை தடை பண்ணப்பட்டு, மீசியா தேசமட்டும் வந்து, பித்தனியாவுக்கு போக பிரயத்தனம் பண்ணினபோது, ஆவியானவர் அவர்களை போக வொட்டாதிருந்தார் என்று அப்.16:6-9ம் வசனங்களில் ஆவியானவர் வழி நடத்துதலை நாம் காண்கிறோம். ஆவியானவரால் தடை பண்ணப்பட்ட, பவுலுக்கு மக்கெதோனியவுக்கு செல்ல ஆவியானவர் வழி திறந்தார். அங்கு ஊழியம் செய்யும் போது, லீதியாள் என்ற சகோதரியின் இருதயத்தை கர்த்தர் திறந்தார். இது ஆவியானவரின் வழிநடத்துதல் ஆகும்.

**ஆவியானவர் நடத்துதலுக்கு கீழ்ப்படியாத கிதியோன்:** கர்த்தர் கிதியோன் மூலம் பலத்த அற்புதங்களைச் செய்தார். அப்போது மூப்பர்கள் கிதியோனைப் பார்த்து, கர்த்தர் உம் மூலம் இந்த பெரிய இரட்சிப்பை இஸ்ரவேல் ஜனங்களுக்கு செய்ததால், இனி வரும் நாட்களில் நீரும், உம்முடைய குமாரனும், உம்முடைய குமாரரின் குமாரனும் எங்களை ஆளுகை செய்ய வேண்டும் என்று கிதியோனைப் பார்த்து கேட்டுக் கொண்டார்கள். இதைக்கேட்ட கிதியோன், நான் உங்களை ஆளமாட்டேன், என் குமாரனும் உங்களை ஆள மாட்டான், கர்த்தரே உங்களை ஆளுவாராக என்று கூறியதாக நியாயாதிபதிகள் 8:23ல் நாம் வாசிக்கின்றோம். இப்படியாக சொன்ன கிதியோன், ஆவியானவரின் சத்தத்திற்கு செவிகொடுக்காமல், ஜனங்களைப் பார்த்து, உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன் என்று கூறி, ஜனங்களிலிடமிருந்து கடுக்கன்களை காணிக்கையாக பெற்றுக் கொண்டு அதை வைத்து ஒரு ஏபோத்தை உண்டாக்கி, ஜனங்கள் கர்த்தரை விட்டு விலகிபோகச் செய்தான். அது கிதியோனுக்கும் அவன் வீட்டாருக்கும் ஓர் கண்ணியாயிற்று என்று வேதம் கூறுகின்றது.

அன்பானவர்களே, ஆவியானவர் நம்மை வழிநடத்த வேண்டும். சர்தை சபையில் ஆவியானவர் வழிநடத்துதல் காணப்பட்டது. நாம் யாவரும் ஆவியானவரின் சத்தம் கேட்டு, அநேகரை ஆவிக்குள் வழிநடத்த அழைக்கப்பட்டுள்ளோம். இக்கடைசி நாளில் கர்த்தர் நம்மை இன்னும் தெளிவாக வழி நடத்துவாராக. ஆமென்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

## 45-வது ஆண்கள் தியான முகாம்

இடம் : ஜெப ஐக்கிய ஜெபக்கூடாரம், சுரண்டை
நாள் : **2024, மே மாதம் 2,3,4**
**வியாழன், வெள்ளி, சனி**

தேவ செய்தி :

**Bro. T.சாம் அற்புதராஜ்**
**Bro. P.D.ஞானப்பிரகாசம்**
**மற்றும் ஐக்கிய ஊழியர்கள்**

**ஆண்கள் ஜெபத்துடன் இம்முகாமில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.**

## கடைசிக்கால நற்செய்தி கூட்டங்கள்

இடம் : ஜெப ஐக்கிய ஜெபக்கூடாரம், சுரண்டை
நாள் : **2024, மே மாதம் 24,25,26**
**வெள்ளி, சனி, ஞாயிறு**
நேரம் : **தினமும் இரவு 7.30 மணி**

தேவ செய்தி :

**ஐக்கிய ஊழியர்கள்**

**அனைவரும் வாருங்கள்.**

### குறிப்பு :

1. ஐக்கியத்திற்காய் அதிகம் ஜெபித்து, ஊழியத்தில் பங்கு பெறுங்கள்.
2. பத்திரிக்கையை அநேகருக்கு அறிமுகம் செய்யுங்கள்.
3. உங்கள் செல்போன் எண்ணை ஐக்கியத்திற்குத் தெரிவியுங்கள்.
4. உங்கள் பிரச்சனைகளுக்காக ஜெபிப்போம்
5. உங்கள் ஜெபம் ஐக்கியத்திற்கு தினமும் தேவை.
6. தேவன் உங்களை அழைத்தால் ஐக்கிய ஊழியங்களை உங்கள் பகுதியில் செய்யுங்கள்.
7. இம்மாதம் அனைத்து ஊழியங்களும் அபிஷேகத்துடன் நடைபெறும்.
8. ஐக்கியத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டவர்கள் பிறரையும் இரட்சிப்பிற்குள் வழி நடத்துங்கள்.
9. எழுப்புதல் TV என்ற சேனல் முகவரியில் YOU TUBE ஊழியம் நடைபெற்று வருகின்றது.

தொடர்புக்கு: **90255 53614, 99429 50132**

## நடப்புச் செய்திகள்.

1. சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி சுழற்பந்துவீச்சாளர் வனிந்து ஹசரங்கா (26 வயது, இலங்கை), இடது குதிகால் வலி காரணமாக ஐபிஎல் 2024 தொடரில் இருந்து விலகியுள்ளார். நடப்பு தொடரில் அவர் பங்கேற்க மாட்டார் என இலங்கை கிரிக்கெட் வாரியம் தரப்பில் பிசிசிஐ-க்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. கர்நாடக மாநில தலைநகர் பெங்களூரு வைட் பீல்ட் அருகில் உள்ள, குந்தலஹாலி பகுதியில் இயங்கி வரும் ராமேஸ்வரம் கபே உணவகத்தில் கடந்த மார்ச் 1ம் தேதி மதியம் திடீரென பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்தது.
3. கடற்கொள்ளை எதிர்ப்பு நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்தியதற்காக ஐஎன்எஸ் சாரதா கப்பலுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.
4. இந்தியாவில் 543 தொகுதிகளுக்கான மக்களவை தேர்தல் வரும் 19ம் தேதி தொடங்குகிறது. இதே போல தென்கொரியாவில் பொதுத்தேர்தல் ஏப்ரல் 10ம் தேதியும், அமெரிக்காவில் அதிபர் தேர்தல் நவம்பர் 5ம் தேதியும் நடக்கின்றன.
5. தூத்துக்குடி மக்களவை தேர்தலை முன்னிட்டு பணப்பரிமாற்றத்தைத் தடுக்கும் வகையில் மாவட்டம் முழுவதும் 54 நிலையான கண்காணிப்பு குழுவினர் மற்றும் 54 நிலையான பறக்கும் படை குழுவினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.
6. 2024ம் ஆண்டு தொடங்கியது முதலே அமெரிக்காவில் படித்து வரும் இந்திய மாணவர்களும், அமெரிக்கவாழ் இந்தியர்களும் கொலை செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் தொடர் கதையாக நீடிக்கிறது. அமெரிக்காவில் இந்தியர்கள் தாக்கப்படுவதை தடுக்க பைடன் நிர்வாகம் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக வெள்ளை மாளிகை தெரிவித்திருந்தாலும் தாக்குதல்களும், மர்ம மரணங்களும் நீடிக்கின்றன.
7. தெலங்கானா - சட்டீஸ்கர் மாநில எல்லையில் மாவோயிஸ்டுகளுக்கும், போலீசாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் எண்கவுன்டரில் 3 மாவோயிஸ்டுகளை போலீசார் சுட்டு கொன்றனர்.
8. துருக்கி நாட்டில் கேபிள் கார் விபத்தில் சிக்கியதில் ஒருவர் உயிரிழந்தார். 23 மணிநேரம் போராடி 174 பேர் மீட்கப்பட்டனர்.
9. இஸ்ரேல் - ஈரான் போர் பதற்றத்திற்கு மத்தியில் 17 இந்திய மாலுமிகளுடன் சரக்கு கப்பல் சிறைப்பிடிப்பு.

## "உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாகிறபடியினாலே..." ரோமர் 1:8

## உலகமெங்கும் உள்ள விசுவாசிகளிடம் வரங்கள் செயல்பட.. I கொரி.12:8-10

1. I கொரி.12:8 ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனம்... உலகமெங்கும் உள்ள ஊழியர்களுக்கு தேவன் ஞானத்தைக் கொடுக்கவும், ஞானத்தைப் போதிக்கும் வசனத்தை வெளிப்படுத்தவும், அவர்கள் செய்யும் ஊழியங்களில் தேவ ஞானம் அதிகமாய் வெளிப்பட ஜெபிப்போம்.
2. I கொரி.12:8 வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனம்... தேவன் அநேகருக்கு அறிவை உணர்த்தும் வசனத்தை கொடுக்கவும், இதனால் வசன எழுப்புதல் உலகமெங்கும் உண்டாகவும், பிசாசின் கிரியைகளை அழிக்கப்படவும் ஜெபிப்போம்.
3. I கொரி.12:9 வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசம்.... தேவன் யாவர் மீதும் இறங்கி விசுவாச வரத்தை ஊற்றவும், இதனால் யாவரும் விசுவாசித்து ஜெபிக்கும் கிருபைகள் அதிகமாய் பெற்றுக் கொள்ளவும், விசுவாசத்தில் யாவரும் வல்லவர்களாய் மாறவும் ஜெபிப்போம்.
4. I கொரி.12:9 வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்கள்.. தேவன் அநேகருக்கு குணமாக்கும் வரத்தைக் கொடுக்கவும். இதனால் வியாதிப்படுக்கை யாவரையும் விட்டு விலகவும், மருத்துவ அலைச்சல்கள் முற்றிலும் நீங்கவும் ஜெபிப்போம்.
5. I கொரி.12:10 வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தி... தேவன் அநேகர் மேல் இந்த வரத்தை வைத்து அற்புதங்களைச் செய்யவும். ஊழியத்தில், குடும்பத்தில், தொழிலில் அற்புதங்கள் இன்னும் அதிகம் நடக்கவும், இதனால் அநேகர் அவர்கள் மூலம் தேவனண்டை வரவும் ஜெபிப்போம்.
6. I கொரி.12:10 வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தல்... தேவன் அநேகர் மேல் தமது தீர்க்கதரிசன ஆவியை ஊற்றவும், இதனால் பிற்காலத்தில் நடக்கும் காரியங்களை முன்கூட்டிய அறியவும், இதிலே யாவருக்கும் நல்ல வளர்ச்சி, முதிர்ச்சி உண்டாகவும் ஜெபிப்போம்.
7. I கொரி.12:10 வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதயும் வரம்... யாரிடம் எப்படிப்பட்ட ஆவியிருக்கிறது என்பதை கண்டறியும் வரத்தை தேவன் கொடுக்கவும், இதனால் யாரும் வஞ்சிக்கப்படாமல், கடைசிவரைக்கும் சாட்சியாய் ஜீவகாலம் முழுதும் வாழ ஜெபிப்போம்.
8. I கொரி.12:10 வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசும் வரம்... தேவன் அநேகரை தமது ஆவியினால் நிரப்பவும், பற்பல பாஷை பேசும் வரத்தையும், அதனுடைய பொருளை அறியும் அறிவை கொடுக்கவும், இதனால் யாவரும் பக்திவிருத்தியடையவும், ஆவியில் பெலனடையவும் ஜெபிப்போம்.
9. I கொரி.12:10 வேறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணும் வரம்... இந்த வரங்களையும் தேவன் அநேகருக்குக் கொடுக்கவும், இதனால் யாவரும் ஆவியில் பெலப்படவும், தேவன் தமது வரங்களை யாவருக்கும் கொடுத்து பயன்படுத்த ஜெபிப்போம்.

**குறிப்பு:** அன்பானவர்களே, மேற்கண்ட ஜெபக்குறிப்புகள் அனைத்தும், தேவன் கிருபையாய் இரங்கி, தமது ஜனங்களுக்கு அருளும் ஈவு ஆகும். இந்த வசனங்களை வைத்து ஜெபிக்கும் போது, தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு, ஒவ்வொருவருக்கும் தமது வரங்களை கொடுத்து பல நாடுகளில் உள்ள விசுவாசிகளை, ஊழியர்களை பயன்படுத்துவார். அப்போது புதிய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவார்கள். ஏராளமான ஊழியர்கள் தேசத்தில் எழும்புவார்கள். உலகத்தை ஆளுகை செய்யும் பிசாசின் ஆவிகள் அழிக்கப்பட தேவ ஆவி இன்னும் யாவர் மீதும் இறங்கும். எல்லா வரங்களும் செயல்படும்போது, யாவருக்குள்ளும் தேவ அன்பு இன்னும் அதிகமாய் ஊற்றப்படும். கடைசிக்காலத்தில் ஓர் எழுப்புல் உண்டாகும். உலகத்தை கலக்குகிறவர்களாய் நாம் மாறுவோம். இதற்காக தேவன் நம்மை அழைத்துள்ளார். நம் அழைப்பை உண்மையாய் நிறைவேற்ற தேவன் கரத்தில் நம்மை ஒப்புக்கொடுப்போம். பூமியெங்கும் கர்த்தரின் கண்கள் உலாவிக் கொண்டிருக்கிறது. அவரின் பார்வை நம்மீதும் வருகின்றது. இம்மாத ஜெபக்குறிப்புகளுக்கு, தொடர்ந்து ஜெபிப்போம். இப்படிச் செய்யும் போது, நமக்குள் சோர்வு உண்டாகாமல் உற்சாகம் இன்னும் உண்டாகும். தேவன் உங்களை வல்லமையாய் பயன்படுத்துவார். எல்லாருக்கும் நாம் ஜெபிப்போம்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

## நம்மை வர்த்திக்கப் பண்ணும் அபிஷேகம் - 136 எரேமியா 30:19

**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,** இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். நாம் இரட்சிக்கப் பட்டிருந்தாலும், பரிசுத்த ஆவியினால் அபிஷேகமும் பெற்றுக்கொள்ள வேண்டும். அபிஷேகம் நமக்குள் இருக்கும்போது நாம் வர்த்திக்கப்பட்டுக் கொண்டேயிருப்போம். அபிஷேகம் இல்லாவிட்டால், வளர்ச்சியில்லாமல் நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருப்போம். அபிஷேகம் பெற்று வர்த்திக்கப்பட்டவர்களை இப்பகுதியில் தியானிப்போம்.

### அப்போஸ்தலனாகிய பரிசுத்த பேதுரு :

அப்போஸ்தலனாகிய பேதுரு, இயேசு கிறிஸ்துவின் பிரதான சீடர் ஆவார். இயேசு எங்கே சென்றாலும், மூன்று சீடர்களை அழைத்துச் செல்லுவார். அதில் பிரதான இடம் பேதுருவுக்கே உண்டு. இப்படியாக இயேசுவுக்கு முக்கியமான சீடனாக விளங்கினாலும், ஆவிக்குரிய ஜீவியத்திலும், ஊழியப் பாதையிலும் ஒரு சரியான வளர்ச்சியற்றவராகவே பேதுரு காணப்பட்டார். அடிக்கடி சீடர்களுடன் வாக்குவாதங்களில் ஈடுபடுவார். மேலும் பேதுரு, இயேசுவை நோக்கி, இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே, எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றும் சில வேளைகளில் கேள்வியும் கேட்டுக் கொள்வார் (மத்தேயு 19:27). இதுமட்டுமல்ல, ஒருமுறை இயேசு கடலில் தண்ணீர்மேல் நடந்தது வருகையில், பேதுரு இயேசுவை நோக்கி, ஆண்டவரே, நீரேயானால், நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வர கட்டளையிடும் என்றான் என்று மத்தேயு 14:28ல் வாசிக்கின்றோம். நடந்து போகப் பிரயாசப்பட்ட போது, காற்று பலமாய் இருக்கிறதைக் குறித்து பயந்து, அமிழ்ந்து போகையில், ஆண்டவரே என்னை இரட்சியும் என்று கூப்பிட்டதாகவும், உடனே இயேசு, தமது கையை நீட்டி, அவனைப் பிடித்து, அற்ப விசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய் என்று கூறி காப்பாற்றியதாக வேதம் கூறுகின்றது. இன்னும் இதைபோல் அநேக சம்பவங்கள் பேதுருவின் வாழ்க்கையில் நடந்தது உண்டு. கடைசியாக கூறினால், பேதுருவின் வர்த்திக்கப்படாத நிலைமை தான், பேதுரு இயேசுவை மறுதலிக்கும் அளவிற்கு கொண்டு சென்றது.

இந்த நிகழ்வுகள் பேதுருவின் வாழ்வில் ஏற்பட்டதற்கு காரணம் அவர் ஆவியில் வளர்ச்சி இல்லாமல், அதாவது ஆவியைப் பெறாமல் இருந்ததேயாகும். இப்படிப்பட்ட பேதுருவைக் கர்த்தர் வர்த்திக்கப் பண்ண சித்தமானார், இயேசு தன்னுடைய சீடர்கள் அனைவரையும் அழைத்து நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல், என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருங்கள் என்று கட்டளையிட்டு, எல்லா சீடர்களையும் மற்றும் சகோதரிகளையும் ஒரு மேல்வீட்டு அறையில் ஜெபிக்க வைத்தார்கள். அதில் பிரதான பொறுப்பு பேதுருவுக்குத்தான் கொடுக்கப்பட்டது. சீடர்கள் 120 பேரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். அவர்கள் அன்றையத்தினம் விசேஷித்த அபிஷேகத்தை பெற்றுக் கொண்டார்கள். யோவேல் தீர்க்கன் கூறிய வாக்குத்தத்தம் அந்த நாளில் நிறைவேறத் தொடங்கியது. அப்போது சீடர்களுக்குள் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டது. குறிப்பாக பேதுருவுக்கு பெரிய மாற்றம் உண்டாகி, தலைமைப் பொறுப்பில் சேர்க்கப்பட்டார். அபிஷேகம் கிடைத்தபின் தான் முன்னேற்றம் ஏற்பட்டது. குறிப்பாக பரி.பேதுருவுக்கு ஏற்பட்ட மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் தொடர்ந்து தியானிப்போம். இப்படிப்பட்ட மாற்றங்களை தேவன் நமக்கும் தந்து, இக்ககடைசிக்காலத்தில் நன்றாக பயன்படுத்துவார். ஆமென்.

பேதுருவின் வாழ்வில் அபிஷேகத்தையும், அதனுடைய விளக்கத்தையும் மற்றவர்களுக்கு எழுதுவதற்கு தலைமை அபிஷேகப் போதகனாக மாறினார். தனக்கு ஏதாவது கிடைக்குமா என்று எதிர்பார்த்த போது, பிறவி சப்பாணி இயேசுவின் நாமத்தில் சுகமடைந்தது, பேதுருவுக்குள் இருந்த அபிஷேகமேயாகும் (அப்.3:5,6,7). மேலும் அபிஷேகத்துடன் பேதுரு பிரசங்கம் பண்ணும் போது, 3000 பேர் 5000 பேர் விசுவாசிகளாக மாற்றம் பெற்றனர். பேதுரு நிழல்பட்டு சுகமடைந்தவர்கள் அநேகர். பேதுருவின் வார்த்தைகளை கேட்டவர்கள் இவர்கள் இயேசுவோடு கூட இருந்தவர்கள் என்று சாட்சி கொடுத்தார்கள். அபிஷேகம் பெற்றபின் பேதுரு நேரம் ஒதுக்கி ஜெபிக்கத் தொடங்கினார். ஜெபவேளை யாவரையும் நல்ல மாற்றத்திற்குள் வழி நடத்தியது. அனனியா – சப்பீராள் தங்களது காணிக்கையில் செய்த தவறுகளை பேதுருவின் அபிஷேகம் கண்டித்து உணர்த்தியது.

அதுமட்டுமல்ல, கொர்நேலியு ஆயத்தம் பண்ணின ஜெபக்கூட்டத்தில் கூடியிருந்த ஜனங்கள் மீது, பரிசுத்த ஆவியானவர் பலமாய் இறங்கினார். இன்னும் இதைபோல, ஏராளமான அபிஷேகம் சாட்சிகளை நாம் வேதத்தில் வாசிக்கிறோம். இவைகளை நாம் வாசிக்கும் போது, நமக்கும் இந்த நாட்களில் இப்படிப்பட்ட அபிஷேகம் தேவை என்பதை நாம் வாஞ்சிக்கிறோம். கர்த்தர் கடைசி நாட்களில் யாவர் மேலும் தமது ஆவியை ஊற்ற சித்தமானவராய் இருக்கிறார். நாம் மனத்தாழ்மையோடும் ஜெபத்தோடும், தேவன் நம்மை ஆவியில் நிரப்பவும் அநேகருக்கு பயன் உள்ள கருவிகளாய் கர்த்தர் பயன்படுத்தவும் இந்த அபிஷேகம் தேவை. கர்த்தரிடத்தில் நம்மை முழுமையாய் ஒப்புக்கொடுப்போம். நம் மூலம் அநேகர் பாவங்கள் வெளிப்படும். அநேக வியாதியஸ்தர்கள் சுகமடைவார்கள். நம்முடைய உபதேசத்தைக் கேட்டு பயனடைவார்கள். இயேசுவின் வருகையில் நம்முடன் பரலோக ராஜ்யம் வர வேண்டும். இன்றே தனிமையாய், குடும்பமாய், சபையாய், குழுக்களாக கூடி பரிசுத்த ஆவியின் நிறைவுக்காக ஜெபிக்க தொடங்குங்கள். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார். ஆமென்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம், சுரண்டை.**

Registrar of Newspapers for India,
Registration 71982/98, New Delhi

TN/WPP-168/SR/2024-2026
Licenced to Post without prepayment
Posted at Surandai on 27th 28th of every month

Postal Registration Number of R.N.P,KOL /005/2024-2026
Date of Publication : April 26,2024
Date of Posting : April 27,2024 Posted at Surandai

## வேதத்தின் மகத்துவங்களில்... சில...

**"நீங்கள் பேசவேண்டியவைகளை பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்திலே உங்களுக்குப் போதிப்பார்."** லூக்கா 12:12

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நாம் தியானிக்கும் வேத வசனங்கள் மகத்துவம் நிறைந்ததாய் இன்றும் காணப்படுகிறது. இந்த வசனங்களை நாம் அடிக்கடி தியானித்து, அவைகளை நமது உள்ளத்தில் பதித்து வைத்துக் கொள்வது நல்லது. நம் இருதயம் வெறுமையாய் ஒரு போதும் இருக்கவே கூடாது. வசனம் முழுவதும் ஆவியால் நிறைந்தவைகளே. சில வேளைகளில் உடனே பதில் சொல்ல வேண்டிய நிலையில் இருப்போம். வேதத்தின் அடிப்படையில், ஆவியின் பலத்தில் வசனத்தை பெற்றுக் கொண்டவர்களைப் பற்றி தியானிப்போம்.

IIஇராஜாக்கள் 5:1-14 வசனங்களை நாம் வாசிக்கும்போது, பரிசுத்த ஆவியால் நிறைந்த எலிசா என்ற ஊழியரையும் அவருக்குள் இருந்த பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு கிரியை செய்தார் என்று கூறப்பட்டுள்ளது. நாகமான் குஷ்டரோகி தனக்கு சுகம் வேண்டி, எலிசாவிடம் வந்தார். எலிசாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உடனே வெளிப்பட்டது. எலிசா, நாகமானைப் பார்க்க ஆள் அனுப்பி, நீ போய் யோர்தானில் ஏழு தரம் ஸ்நானம் பண்ணு. அப்பொழுது உன் மாமிசம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச் சொன்னான் (IIஇராஜா.5:9,10). எலிசா மூலம் தேவன் கொடுத்த வார்த்தையை ஏற்றுக் கொள்ள நாகமான் மறுத்தாலும், ஆவியானவரின் வார்த்தையை ஏற்றுக் கொள்ளவும், நல்ல சுகத்தை பெற்றுக் கொள்ளவும் தேவன் கிரியை செய்தார். இதற்கு காரணம், எலிசா பேசினது பரிசுத்த ஆவியானவரின் வார்த்தையே காரணமாகும்.

அன்பானவர்களே, எலிசா போல நாமும், பரிசுத்த ஆவியுள்ள வசனத்தை இருதயத்தில் தரித்துக் கொள்ளும் போது, அந்தந்த இடத்திற்கு தக்கபடி தேவ கிருபையை நாம் பெற்றுக் கொள்ள முடியும். இந்த நாட்களில் தேவ ஆவி பெற்று, ஊழியம் செய்யும் ஊழியர்களை தேவன் அழைக்கின்றார். எந்தக் கடினமான பிரச்சனை வந்தாலும் ஆவியின் பெலத்தால் நாம் அவைகளை ஜெயிக்க முடியும். எலிசா, ஜெபிக்கும் போது, தனக்கு இரட்டிப்பான ஆவியின் வரம் கேட்டதுபோல, நாம் அனைவரும் ஆவியின் வரங்களை கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டும். நம்மை முழுமையாய் தேவனுக்கு ஒப்புக் கொடுத்து வாழ்வோம். தேவன் லூக்கா 12:12ன்படியே இம்மாதம் முழுவதும் மட்டுமல்ல, நம் வாழ்நாள் முழுவதும் வழி நடத்துவார். ஜெப ஐக்கியத்தை ஆவியானவரே நடத்தினார். இன்னும் வழி நடத்துவார். கர்த்தர் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் விசேஷமாக வழி நடத்துவார். இன்னும் அதிகம் ஜெபிப்போமாக ஆமென்.

*If undelivered please return to....*

**Bro.P.Duraisingh Gnanapragasam**
14-6-3(34) Ratna Complex, SURANDAI - 627 859.
Tenkasi (Dt), Tamil Nadu, India.
www.revival.org.in
Cell: 90255 53614, 99653 36459, 9942950132
Ph: 04633-290480

To.
Bro/Sis
Pin

Printed by P.Thanapaul, Published by P.Duraisingh Gnanapragasam owned by P.Duraisingh Gnanapragasam and Printed at Ravi Printers, 10-7-16 Bus-Stand Road, Surandai - 627 859. Tenkasi (Dist) and published at 14-6-3(34), Ratna Complex, Surandai - 627 859. Tenkasi (Dist) Editor P.Duraisingh Gnanapragasam.